

அமரர் புலமைச்சிகரம்

வே.அன்பழகன் ஞாபகார்த்தமாக

lvinstamil.com செய்தி இணையத்தளம் நடாத்தும்

தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும்

வழிகாட்டல் கருத்தரங்கும்- 2022 (முற்றிலும் இலவசமானது)

திரு. து.திலீப்குமார் SLPS, Dip. in. Teach, B.Ed, PGDEM, M.Ed®

(பிரதி அதிபர், கொ/புனித லூசியாள் கல்லூரி, கொழும்பு)

சுட்டெண் : ----------

வினாத்தாள் I

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
- ஒவ்வொருவினாவிலும் மூன்றுவிடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	ஒப்பம்
முதலாவதுபரீட்சகர் புள்ளிவழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்று படுத்துகின்றேன்.	**V/II/T/**
இரண்டாவதுபரீட்சகர் முதலாவதுபரிசீலணையின் மதிப்பீடுசரியானதெனச் சான்றுபகிர்கின்றேன்.	**V/II/T/**
கணிதபரீட்சகர் மதிப்பீடுவழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளிசரியானதென தெரிவிக்கின்றேன்	**V/II/T/EMF/**
பிரதமபரீட்சகர் மேற்பார்வைசெய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன்	**V/II/T/CH/**

www.lkedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk



அமரர் புலமைச்சிகரம்

வே.அன்பழகன் ஞாபகார்த்தமாக

lvinstamil.com செய்தி இணையத்தளம் நடாத்தும்

தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும்

வழிகாட்டல் கருத்தரங்கும்- 2022 [முற்றிலும் இலவசமானது]

திரு. து.திலீப்குமார் SLPS, Dip. in. Teach, B.Ed, PGDEM, M.Ed○

(பிரதி அதிபர், கொ/புனித லூசியாள் கல்லூரி, கொழும்பு)

பகுதி I **நேரம் : 1 மணித்தியாலம்**

■ பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

1) பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாக காட்டும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



1) A, C, D, E, B 2) C, A, E, D, B 3) E, A, C, B, D

2) பின்வரும் உருக்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடைத்தொகுதியினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) BE AD CF 2) BC AF DE 3) BD EC AF

3) கீழே தரப்பட்டுள்ள முதல் இரண்டு சொற்களுக்கிடையில் ஏதோவொரு வகையில் நெருங்கிய தொடர்புண்டு. அதோபோன்ற நெருங்கிய தொடர்புள்ள இரண்டு சொற்களைத் தெரிவு செய்க.

புத்தகம் - கடதாசி

1) பூ - கொடி 2) சாடி - தண்ணீர் 3) பாண் - மாவு

4) தற்போது எனது வயது தங்கையின் வயதின் நான்கு மடங்காகும். இன்னும் நான்கு வருடங்களின் பின் எனது வயது தங்கை யின் வயதின் இரு மடங்காகும். அதன்படி, தங்கையின் தற்போதைய வயது

1) 3 2) 2 3) 4

www.lkedu.lk


5) அறையில் வைத்திருக்கும் சுவர் கடிகாரத்தை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது நேரம் 1.30 ஆகக் காணப்பட்டது. அதன்படி, சுவர்கடிகாரத்தின் உண்மையான நேரம்

1) 10.30 2) 11.30 3) 9.30

6) ஹீசைன் என்னை விட 6 வயது மூத்தவர். நசீர் என்னை விட 4 வயது இளையவர். அதன்படி, ஹீசைன் மற்றும் நசீர் பிறந்த வருடங்களாக இருக்கக்கூடியது,

1) ஹீசைன் 2016, நசீர் - 2006 2) ஹீசைன் 2004, நசீர் - 2014 3) ஹீசைன் 2014, நசீர் - 2004

7)




உரு A உரு B

சாய்ந்த தென்னை மரமொன்றைக் கம்பியொன்றின் மூலம் இன்னுமொரு தென்னை மரத்தில் இழுத்துக் கட்டப்பட்டுள்ள முறையை இவ்வுருக்கள் காட்டுகின்றன. உருக்கள் வரையப் பட்ட முறைகளுக்கேற்ப,

1) உரு A மாத்திரம் சரியானது 2) உரு B மாத்திரம் சரியானது 3) A,B ஆகிய இரு உருக்களும் சரியானது

8)



இந்த உருவில் A, B, C இனால் காட்டப்பட்டுள்ளது?

1) A - பிள்ளைகள், B - ஆண் பிள்ளைகள், C - பெண் பிள்ளைகள்


2) A - வாகனங்கள், B - புகையிரதம், C - பேருந்து.

3) A - பிராணிகள், B - கரடி, C - காடுகளில் வாழும் பிராணிகள்

9) வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 9 Km ஆகும். வீட்டிலிருந்து வைத்தியாலைக்கு உள்ள தூரம் 12Km ஆகும். அதன்படி, பாடசாலையிலிருந்து வைத்தியசாலைக்கு உள்ள தூரம்?

1) 3 Km 2) 21 Km 3) கூறமுடியாது.

10)





இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள வட்டங்களின் எண்ணிக்கை.

1) 8 2) 7 3) 9

11) ஒரேயளவான பாத்திரங்களில் நீர் நிரப்பப்பட்டு மூன்று தொகுதிகளாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ள முறையே கீழே உருக்களி-னால் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, மிகக் கூடிய நீரைக் கொண்டுள்ள தொகுதி.

1) 


2) 

3) 

12) நாதனிடம் ரூபாய் 100.00 நாணயத் தாள்கள் 4 உம், ரூபாய் 50.00 நாணயத் தாள்கள் 3 உம், ரூபாய் 20.00 நாணயத் தாள்கள் 6 உம், ரூபாய் 10.00 நாணயக் குற்றிகள் 8 உம் இருந்தன. அவன் சரவணனுக்கு ரூபாய் 300.00 ஐக் கொடுப்பதற்கு அவனால் கொடுக்கக்கூடிய நாணயத் தாள்களினதும் நாணயக் குற்றியினதும் மிகக் கூடிய எண்ணிக்கை?

1) 16 2) 18 3) 17

13)




அறையொன்றின் நிலத்திற்கு ஒரேயளவான 5 சதுர வடிவ மாபிள்கள் பதிக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி அறைக்குப் பதிப்பதற்குத் தேவையான மாபிள் களின் மொத்த எண்ணிக்கை?

1) 20 2) 18 3) 19

www.ikeau.lk

14)



ஒரு பிள்ளை முற்றத்தில் கோலமிட்ட மூன்று சந்தர்ப்பங்களை அருகே உருக்கள் காட்டுகின்றன. அதன்படி, அப்பிள்ளை 5வது சந்தர்ப்பத்தில் வரையும் கோலத்தில் இருக்கக்கூடிய சிறிய சதுர வடிவங்களின் எண்ணிக்கை,


1) 25 2) 36 3) 34


15) "எல்லாக் கடிகாரங்களும் சரியான நேரத்தைக் காட்டுகின்றன." இக்கூற்று,


1) பெரும்பாலும் உண்மையானது 2) சிலநேரம் உண்மையானது 3) எப்போதும் உண்மையானது.

16) பின்வரும் மூன்று உருக்களிலும் வித்தியாசமான உரு,

1) 

2) 

3) 

17) 

இத்தராசில் A, B பக்கங்களிலுள்ள நிறைகளின் கூட்டுத்தொகை,
1) ஒரு கிலோகிராமை விடக் குறைந்தது.
2) ஒரு கிலோகிராமை விடக் கூடியது.
3) ஒரு கிலோகிராமிற்குச் சமனானது.

மூன்று பிள்ளைகள் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை குறியீடுகளினால் காட்டப்படும் முறை பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது.

பாடம்	ஹுசைன்	பாலா	ரஞ்சித்
சுற்றாடல்	△	✻	△
கணிதம்	○	○	△
தமிழ்மொழி	✻	✻	○

ஒவ்வொரு குறியீட்டிற்கும் உரிய புள்ளி வீச்சு பின்வருமாறு,

△ = 0 - 40 ○ = 41 - 70 ✻ = 71 - 100

மேலேயுள்ள விபரங்களின்படி இலக்கம் (18), (19) ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

18) அதிகமான பாடங்களில் திறமையுள்ள மாணவன்.


1) ஹுசைன் 2) பாலா 3) ரஞ்சித்

19) ஹுசைன் மூன்று பாடங்களிலும் பெற்றுக்கொண்ட ஆகக் கூடிய மொத்தப் புள்ளிகளாக இருக்கக்கூடியது,

1) 20 2) 240 3) 190

20) அந்த கிராமத்தில் 40 வீடுகள் உள்ளன. அக்கிராமத்திலுள்ள மொத்தச் சனத்தொகை 32 ஆகும். அதன்படி, பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) அந்தக் கிராமம் காட்டிற்கு அருகில் அமைந்துள்ளது.
2) அந்தக் கிராமத்திலுள்ள சில நபர்களுக்கு இரண்டு வீடுகள் வீதம் உள்ளன.
3) அந்தக் கிராமத்தில் சில வீடுகளில் மக்கள் இல்லை.

21) 

		R	25
	Q	40	65
P	30	70	

ஒரு பிரதான வீதியில் P, Q, R, S எனும் நான்கு நகரங்கள் அமைந்திருக்கும் முறையை இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது. அந்த நகரங்களுக்கிடையேயுள்ள தூரங்களைக் கிலோமீற்றர்களில் இவ்வட்டவணை காட்டு கின்றது.
இத்தகவல்களுக்கேற்ப, வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான எண்,

1) 95 2) 135 3) 100

www.lkedu.lk

22) பரீட்சைகளில் சித்தியடைவது,

1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கும் மாணவர்கள்.

2) கூடுதலான வினாக்களுக்குச் சரியான விடையளிக்கும் மாணவர்கள்.

3) எல்லா வினாக்களுக்கும் மிக விரைவாக விடையளிக்கும் மாணவர்கள்.

23)

* ஒரு பேனாவின் விலை = 3 அடிமட்டங்களின் விலை
* ஒரு அடிமட்டத்தின் விலை = 2 பென்சில்களின் விலை

மூன்று பிள்ளைகள் பின்வரும் பொருட்களை விலைக்கு வாங்கினார்கள்.

திவ்யா	
பேனா	- 1
அடிமட்டங்கள்	- 3
பென்சில்கள்	- 4

யமுனா	
பேனாக்கள்	- 2
அடிமட்டம்	- 1
பென்சில்கள்	- 2

வசந்தா	
பேனா	- 1
அடிமட்டங்கள்	- 4
பென்சில்கள்	- 3


மேலேயுள்ள தகவல்களுக்கேற்ப, பொருட்களை வாங்குவதற்கு மிகக் கூடிய தொகையைச் செலவிட்டவர்,


1) திவ்யா 2) யமுனா 3) வசந்தா

24) கீழே தரப்பட்டுள்ள மூன்று உருச்சோடிகளில் இரண்டு உருச்சோடிகள் ஏதோவொரு வகையில் தொடர்புடையன. அவ்வாறு தொடர்பற்ற உருச்சோடியைத் தெரிவு செய்க.


1) 


2) 

3) 

25) 

அருகில் தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1) 

2) 

3) 

26) பின்வரும் உருக்களில் பிழையாக வரையப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.

1) 

2) 

3) 

27) 2021 ஆம் ஆண்டில் குறித்த பாடசாலையொன்றில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளின் எண்ணிக்கையும் சித்தியடையாத பிள்ளைகளின் எண்ணிக்கையும் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

சித்தியடைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை		சித்தியடையாத பிள்ளைகளின் எண்ணிக்கை	
ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்
12	6	9	5

www.lkedu.lk

மேலேயுள்ள அட்டவணைக்கேற்ப பரீட்சைக்குத் தோற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை,

1) 18 2) 32 3) 14

28) ஒரு பொருளின் விலையை வியாபாரியொருவரினால் ஆங்கில எழுத்துக்கள் மூலம் குறிக்கப்பட்டுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

M	L	M	T	R	/	L	T

அதன்படி, அப்பொருளின் விலையாக இருக்கக்கூடியது,

1) பத்தைந்தாயிரத்து இருநூற்று நான்கு ரூபாய் ஐம்பது சதம்.
2) நாற்பத்து மூவாயிரத்து நானூற்று எழுபத்தைந்து ரூபாய் முப்பது சதம்.
3) ஐம்பத்து ஆறாயிரத்து நூற்று நாற்பது ரூபாய் ஐம்பது சதம்.

*** ஒரு பேருந்து நிலையத்திலிருந்து ஒரு நாளில், ஒவ்வொரு நகரத்தை நோக்கி பேருந்துகள் புறப்பட்ட நேரங்களைப் பின் வரும் அட்டவணை காட்டுகிறது. அதன்படி, இலக்கம் (29), (30). ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.**

பேருந்துகள் புறப்பட்ட நகரங்கள்	புறப்பட்ட நேரங்கள்	
	மு.ப	பி.ப
இரத்தினபுரி	9.30	.....
திருகோணமலை	.....	7.15
யாழ்ப்பாணம்	6.30	.....
காலி	.....	3.30

29) இரத்தினபுரி நகரத்திற்கு பேருந்து புறப்பட்ட பின்னர் அடுத்த பேருந்து எவ்வளவு நேரத்தின் பின்னர் புறப்படுகின்றது?


1) 4 மணித்தியாலங்களுக்குப் பின்னர். 2) 7 மணித்தியாலங்களுக்குப் பின்னர்.
3) 6 மணித்தியாலங்களுக்குப் பின்னர்.

30) ஒவ்வொரு நகரத்தை நோக்கி பேருந்துகள் புறப்படும் நேரங்களுக்கேற்ப ஒவ்வொரு நகரத்தின் பெயரினை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

1) காலி – திருகோணமலை – யாழ்ப்பாணம் – இரத்தினபுரி
2) யாழ்ப்பாணம் – இரத்தினபுரி – காலி – திருகோணமலை
3) இரத்தினபுரி – திருகோணமலை – யாழ்ப்பாணம் – காலி

31) ரூபாய் 5.00 நாணயக் குற்றி மற்றும் ரூபாய் 10.00 நாணயக் குற்றி சமனான தடவைகள் வீதம் மேலே சுண்டிவிடப்பட்டபோது A பக்கம், B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை பின்வரும் இரண்டு வரைபுகளிலும் காட்டப்பட்டுள்ளன.





மேலேயுள்ள இரண்டு வரைபுகளின்படி, ரூபாய் 10.00 நாணயக் குற்றியில் B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை,

1) 10 2) 08 3) 12

32) மிகச் சரியான கருத்துப் புலப்படும் வாக்கியத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1) நுளம்புகளை சுத்தமாக வைத்தால் சூழலை ஒழிக்கலாம்.
2) சூழலை சுத்தமாக வைத்தால் நுளம்புகளை ஒழிக்கலாம்.
3) நுளம்புகளை ஒழிக்கலாம் வைத்தால் சுத்தமாக சூழலை.


33) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

www.ikeou.lk

துள்ளித்துள்ளி ஓடுதுபார்
வெள்ளை முயல் அம்மா – அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா

இப்பாடலில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழி,

1) வெள்ளை 2) மெல்ல 2) ஆசை

34) 

இப்பெரிய சதுரமுகி ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிழற்றப்பட்டுள்ள சிறிய சதுரமுகி பெரிய சதுரமுகியின் என்ன பங்காகும்?

1) 1/4 2) 1/8 3) 1/9

35)

4	6	12	12	20	
3	8	9	16	15	

அருகேயுள்ள கூடுகளினுள் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுக்கூடுகளுக்குப் பொருத தமான எண்களைத் தெரிவு செய்க.

1)

18
24

2)

20
26

3)


22
18

36) எங்கள் வகுப்பிலுள்ள அதிகமான பிள்ளைகள் ஆண் பிள்ளைகளாவர். வகுப்பிலுள்ள அனைத்து ஆண் பிள்ளைகளும் பேருந்தில் பாடசாலைக்கு வருகிறார்கள். எங்கள் வகுப்பில் பேருந்தில் வரும் சில பிள்ளைகள் ஆண் பிள்ளைகள் அல்ல. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) எங்கள் வகுப்பிலுள்ள எல்லா பிள்ளைகளும் பாடசாலைக்கு பேருந்தில் வருகிறார்கள்.
2) எங்கள் வகுப்பிலுள்ள சில பெண் பிள்ளைகள் பேருந்தில் வருகிறார்கள்.
3) எங்கள் வகுப்பிற்கு சைக்கிள்களில் வரும் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

37) ஆற்றில் எப்போதும் இருப்பது,

1) மீன் 2) நீர் 3) கரை

38) 

தீப்பெட்டிகள் அடுக்கப்பட்டுள்ள முறை இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான அடுக்கிலுள்ள மொத்தத் தீப்பெட்டிகள் 28 எனின், இன்னும் எத்தனை வரிசை கீற வேண்டும்,

1) 3 2) 2 3) 4

39) பின்வரும் நிகழ்வுகளை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A - முதியவர் உணவு கேட்கின்றார்.

B - அதன்பின் மோகன் மகிழ்ச்சியுடன் பாடசாலைக்குச் செல்கின்றான்.

C - மோகன் பாடசாலை செல்ல புறப்படுகின்றான்.

D - மோகன் தனது உணவுப் பொதியை அவருக்குக் கொடுக்கின்றான்.

www.ikodu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

E - வீதி ஓரத்தில் முதியவர் ஒருவர் இருப்பதைக் காணுகின்றான்.

1) E, B, C, A, D 2) B, A, E, D, C 3) C, E, A, D, B

40) எத்திசையிலிருந்து பார்த்தாலும் ஒரே மாதிரி தோன்றுவது,

1) சதுரமுகி 2) கோளம் 3) உருளை





அமரர் புலமைச்சிகரம்

வே.அன்பழகன் ஞாபகார்த்தமாக

Ivinstamil.com செய்தி இணையத்தளம் நடாத்தும்

தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும்

வழிகாட்டல் கருத்தரங்கும்- 2022 (முற்றிலும் இலவசமானது)

திரு. து.திலீப்குமார் SLPS, Dip. in. Teach, B.Ed, PGDEM, M.Ed®

(பிரதி அதிபர், கொ/புனித லூசியாள் கல்லூரி, கொழும்பு)

சுட்டெண் : ----------

வினாத்தாள் II

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன.
- ஒவ்வொருவினாவிலும் மூன்றுவிடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	ஒப்பம்
முதலாவதுபரீட்சகர் புள்ளிவழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்று படுத்துகின்றேன்.	**V/II/T/**
இரண்டாவதுபரீட்சகர் முதலாவதுபரிசீலணையின் மதிப்பீடுசரியானதெனச் சான்றுபகிர்கின்றேன்.	**V/II/T/**
கணிதபரீட்சகர் மதிப்பீடுவழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளிசரியானதென தெரிவிக்கின்றேன்	**V/II/T/EMF/**
பிரதமபரீட்சகர் மேற்பார்வைசெய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன்	**V/II/T/CH/**

www.ikedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

பௌர்ணமி தினமான இன்று முழு நிலா வானில் திருவிழா இரதம் போல பவணி வந்துகொண்டிருக்கிறது. இராப்பொழுதில் இருள் அவனியெங்கும் வெண்மை ஒளி பரவியிருந்தது. தென்னோலைகளிலும், வாழையோலைகளிலும் நிலவொளி பட்டுப் பளபளக்கின்றது. இரவு நேரங்களில் சஞ்சரிக்கும் பறவைகளைக் கூட காண முடிகிறது.

(i) முழு நிலா தோன்றும் தினம் எவ்வாறு அழைக்கப்படும்? .....

(ii) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள எதிர்க்கருத்துச் சொற்சோடியை இனங்கண்டு எழுதுக. .....

(iii) இப்பந்தியில் வந்துள்ள காலப்பெயர் ஒன்றை எழுதுக. .....

(iv) "வெண்மை" இந்த சொல்லில் காணப்படும் உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக. .....

.....

(v) "பறவைகளை" என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக. .....

02) பின்வரும் சந்தர்ப்பத்திற்கு மிகப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

இளமையிற் பழகிய பழக்கத்தை வயது சென்ற காலத்திலும் திருத்த முடியாது.

.....

03) பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

டில்சான் தனது தாயைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்களா என்று கேட்டான்

04) பின்வரும் வாக்கியத்தை பெண்பால், ஒருமை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

மகன் அழகான படம் வரைந்தான் :- .....

05) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை எழுத்து வழக்கில் எழுதுக.

நாங்கள் கோவிலுக்குப் போவோம் :- .....

06) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து மிகச் சரியானச் சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

(i) விவசாயி வயலில் ..... (கலைகளைப் , களைகளைப் , களைகலைப்) பிடுங்கினான்.

(ii) நானும் நண்பர்களும் ..... (ஒளித்து , ஒலித்து , ஒழித்து) விளையாடினோம்.

07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) நாளை பரிசளிப்பு விழா ..... (நடைபெறுகின்றது , நடைபெற்றது , நடைபெறும்)

(ii) எங்கள் ஊரில் நேற்று நல்ல மழை ..... (பெய்தது , பெய்கின்றது , பெய்யும்),

(iii) பூக்களில் தேனீ தேனை உறிஞ்சிக் ..... (குடிக்கின்றன , குடித்தன , குடித்தது)

08) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(நாம், கற்கள், சிறுவர்கள், நான்)

(i) சுவர் + ஓவியம் - ..... (ii) நூறு + ஆண்டு - .....

09) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திற்கும் பொருத்தமான மரபுத் தொடரைக் கட்டத்திற்குள் இருந்து தெரிவுசெய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

(i) மனம் நோகப் பேசுதல் :- .....

(ii) நிறையச் சம்பாதித்தல் :- .....

கண் வளர்த்தல் , அள்ளிக் குவித்தல் , நாக்குப் புரளுதல் , புண்படுத்தல்

10) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும். பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) "மடக்கேறும் அரவும்" என்னும் உயிர்க்குறி இடம்பெற்றுள்ள சொல்லொன்றை எழுதுக.....

(ii) "கீழ்க்காலும் சுழியும்" என்னும் உயிர்க்குறி இடம்பெற்றுள்ள சொல்லொன்றை எழுதுக.....

11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப்' பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) A ..... (doctor / teacher / postman) brings us letters.

(ii) The man is ..... (cutting / writing / reading) the trees.

12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) Who are you .....

(ii) Look at me .....

13) சரியாக எழுதப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i)  :- (Windaw / Window / Wendow)

(ii)  :- (Shoes / Shoos / Sheos)

14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களை தமிழில் எழுதுக.


(i) පෝලය :- ..... (ii) පුට්ටුව :- .....

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் ஊர் எது? .....

16) கீழே தரப்பட்டுள்ள எண்களை உரோம எண்குறிகளில் எழுதுக.

(i) இருபது :- ..... (ii) பதினான்கு :- .....

17)  உருவிலுள்ள,


(i) செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? .....

(ii) செங்கோணத்தை விடக் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது? .....


18)  இவ்வுருவின் சமச்சீர் அச்சுக்களை வரைந்துக் காட்டுக.

www.lkedu.lk

19) 2124 + 1017 இன் விடையை இவ்வெண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.



20)




தாயக்கட்டையொன்று 36 தடவைகள் மேலே சுண்டிவிடப் பட்டபோது ஒவ்வொரு இலக்கமும் விழுந்த தடவை-களின் எண்ணிக்கை அருகிலுள்ள வரைபினால் காட்டப்பட்டுள்ளது.

(i) இலக்கம் 4 விழுந்த தடவைகளின் எண்ணிக்கையை வரைபில் உரிய நிரலில் நிழற்றிக் காட்டுக.


(ii) 6 தடவைகள் அல்லது 6 ஐ விட அதிக தடவைகள் விழுந்த இலக்கங்கள் எவை? .....

21)



கங்கா வீட்டிலிருந்து வைத்தியசாலைக்குப் பயணித்த திசைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.....

22)



இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும் என்பதைத் தசம எண்ணாகத் தருக.

.....

23) குமார் ரூபாய் 745.00 ஐ எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றான். ரூபாய் 1970.00 விலையிலான கடிகார மொன்றை வாங்குவதற்கு அவனுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?

.....

24)



இக்கடிகார முகத்தில் முற்பகல் நேரம் காட்டப்பட்டுள்ளது. அந்நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

.....

25) முற்பகல் 10.45இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்ட ரவி பிற்பகல் 2.00 இற்கு நூலகத்திற்குச் சென்றடைந்-தான். வீட்டிலிருந்து நூலகத்திற்குச் செல்வதற்கு ரவிக்கு எடுத்த நேரத்தை மணித்தியாலங்களிலும் நிமிடங்க-ளிலும் எழுதுக.

..... மணித்தியாலங்கள் ..... நிமிடங்கள்

26) பின்வரும் எண் கோலங்களின் வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான எண்களை வெற்றுக்கூடுகளினுள்ளேயே எழுதுக..

(i) 90, 70, 50, 30 ☐ (ii) 1, 4, 9, 16 ☐ 36

27) 30900 - 1 இன் விடையை சொற்களில் எழுதுக.

.....

28) 500 கிராம் கரட்டின் விலை ரூபாய் 80.00 ஆகும். 1 kg கரட்டை கொள்வனவு செய்து ரூபாய் 50.00 நாணயத் தாள்கள் 4 ஐக் கொடுத்தபோது கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

.....

www.ikedu.lk

29) (i) 3m 50cm நீளமான மூன்று ரிபன் துண்டுகளின் மொத்த நீளம் எவ்வளவு? .....

(ii) ஒரு பாத்திரத்தில் 8L 520 ml குளிர்பானம் உள்ளது. அது சமனாக 4 பாத்திரங்களில் ஊற்றப்பட்டது. இப்போது ஒரு பாத்திரத்திலுள்ள குளிர்பானத்தின் அளவு எவ்வளவு? .....

❖ **இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக..**

30) சந்தையில் விற்பனை செய்யப்படும் சீனி குறைந்தளவில் உள்ள பான வகைகளின் மேலுறைகளில் அச்சிடப்பட்டுள்ள வட்டத்தின் நிறம்.

1) பச்சை 2) மஞ்சள் 3) சிவப்பு

31) 

இம்மின்குமிழின் வெளிச்சத்தை அதிகரிப்பதற்குச் செய்ய வேண்டியது,

1) செப்புக் கம்பியின் நீளத்தை அதிகரிக்கச் செய்தல்.
2) சிறிய மின்குமிழிற்கு பதிலாக பெரிய மின்குமிழை பயன்படுத்தல்.
3) உலர் மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்.

32) சட்டக்காந்தமொன்றின் வடமுனையையும் தென்முனையையும் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள்,

1) E மற்றும் W 2) N மற்றும் S 3) X மற்றும் Y

33) பண்டைய கலைப்படைப்பாகிய பலாப்பெத்தி அலங்காரத்தைக் காட்டும் உரு

1)  2)  3) 

34) கடும் சிவப்பு நிறமான கண்களையுடைய பறவை,

1) செண்பகம் 2) கொக்கு 3) மரங்கொத்தி

35) இலங்கையில் முதலாவது தேயிலைச் செடி நாட்டப்பட்ட இடம்,


1) வட்டவல தோட்டம். 2) லூல்கந்துர தோட்டம் 3) லிப்டன் தோட்டம்

36) "கார்த்திகை" பூவின் நிறங்கள்,

1) மஞ்சள், நீலம் 2) வெள்ளை, சிவப்பு 3) சிவப்பு, மஞ்சள்

37) இலங்கைக்குத் தெற்குத் திசையில் அமைந்துள்ளது.

1) இந்து சமுத்திரம் 2) ஆபிரிக்க நாடுகள் 3) மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள்.

38) 

பிள்ளையொன்றினால் செய்யப்பட்ட பரிசோதனையைக் அருகிலுள்ள உரு காட்டுகின்றது. இவ்வுருவில் A யினால் காட்டப்படுவது,

1) பலகைத் துண்டு 2) தளவாடி 3) சட்டக்காந்தம்

www.kedu.lk

39) உடல் முழுவதும் முட்களைக் கொண்ட பிராணி,

1) வண்டு 2) உடும்பு 3) முள்ளம்பன்றி

40) 

இம்முறையிலான கால்களைக் கொண்ட பறவை,

1) பருந்து 2) மரங்கொத்தி 3) கோழி

41) விலங்குகளில் தங்கியிருக்கும் பூ வகை,

1) 

2) 

3) 

42) 

இவ்வுருவிலுள்ள பொலிஸ் அதிகாரியினால் காட்டப்படும் சமிக்ஞை,

1) பின்னால் வரும் வாகனங்கள் மாத்திரம் நிறுத்துக.
2) முன்னால், பின்னால் வரும் வாகனங்கள் அனைத்தும் நிறுத்துக.
3) முன்னால் வரும் வாகனங்கள் மாத்திரம் நிறுத்துக.

43) கரம் விளையாட்டில் பயன்படுத்தப்படும் சிவப்பு நிறக் காய்களின் எண்ணிக்கை.

1) 2 2) 3 3) 1

44) பெண்களால் மட்டும் விளையாடப்படும் விளையாட்டு,

1) வலைப்பந்து 2) கூடைப்பந்து 3) கரப்பந்து

45) அருகருகே அமைந்துள்ள இரு மாகாணங்கள்,

1) வடமேல் மாகாணம், தென் மாகாணம்
2) ஊவா மாகாணம், கிழக்கு மாகாணம
3) மத்திய மாகாணம், மேல் மாகாணம்

46) ஒரே சமனான எண்ணிக்கையிலான பாதங்களைக் கொண்ட பிராணிகள்,

1) நண்டு, இறால் 2) சிலந்தி, தேனீ 3) உண்ணி, எறும்பு

47) தேசப்படத்தில் அதிவேக வீதியை குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஆங்கில எழுத்து,

1) A 2) D 3) E

48) இரண்டு மாவட்டங்களை மாத்திரம் கொண்டுள்ள மாகாணம்,

1) கிழக்கு மாகாணம் 2) வடமத்திய மாகாணம் 3) மேல் மாகாணம்

49) இலங்கை அரச இலச்சினை பற்றிய சரியான கூற்று,

1) அரச இலச்சினையின் உச்சியில் வாளேந்திய சிங்கம் உள்ளது.
2) பூவிதழ்களின் சரிநடுவில் நெற்கதிர்கள் உள்ளன.
3) சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் நிறைகுடம் உள்ளது.

50) ஒற்றுமையாகச் செயற்பட்டு, பாரமான உணவுகளைக்கூடக் காவிச்செல்லும் விலங்கினம்,

1) எறும்பு 2) சிலந்தி 3) கரப்பான்

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

51) இலங்கைக்கே உரித்தான தாவரம் அல்லாதது,

1) எண்ணை 2) காட்டிலுப்பை 3) ஈரப்பலா

52) பின்வரும் விளையாட்டுக்களில் ஒரு குழுவில் மிகக் குறைந்த வீரர்கள் பங்குகொள்ளக்கூடிய விளையாட்டு,

1) கிரிக்கெட் 2) கரப்பந்து 8) வலைப்பந்து

53) மின்காந்தம் ஒன்றை அமைக்கத் தேவையான பொருட்தொகுதி,

1) செப்புக் கம்பி, சட்டக்காந்தம், இரும்பாணி, குண்டூசி

2) இரும்பாணி, செப்புக் கம்பி, உலர் மின்கலம், மின்குமிழ்

3) இரும்பாணி, செப்புக் கம்பி, குண்டூசி, உலர் மின்கலம்.

54) இலங்கை அரச இலச்சினையிலுள்ள குறியீடுகளையும் அவற்றால் குறிக்கப்படுவனவற்றையும் சரியாகக் காட்டும் விடை,

1) நெற்கதிர்கள் – தன்னிறைவு 2) நிறைகுடம் – தார்மீகம் 3) சூரியன், சந்திரன் – சௌபாக்கியம்

55) நதிகளையும் அவை கடலில் கலக்கும் இடங்களையும் சரியாகக் காட்டும் விடை அல்லாதது,

1) மாணிக்க கங்கை – களுத்துறை

2) களனி கங்கை – கொழும்பு

3) நில்வள கங்கை – மாத்தறை

56) இலங்கைத் தேசியக் கொடியிலுள்ள வாளேந்திய சிங்கம் எந்நிறப் பின்னணியில் காணப்படுகிறது?

1) மஞ்சள் 2) செம்மஞ்சள் 3) சிவப்பு

57) மஞ்சாடியைப் பயன்படுத்தி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு,

1) பல்லாங்குழி 2) போர்த்தேங்காய் 3) சடுகுடு

58) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள வித்து,

1) முருங்கை 2) புலிநகம் 3) இறப்பர்

59) தைப்பொங்கல், பொசன், ஹஜ்ஜ்ப் பெருநாள், நத்தார் ஆகிய சமயப் பண்டிகைகளைக் கொண்டாடும் சமயத்-தவர்களை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடை,

1) இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள்

2) இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், பௌத்தர்கள்.

3) பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்கள்.

60) "தொற்று நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்வோம்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும், எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

www.kedu.lk